திருச்சிற்றம்பலம்.

இளங்காடு என்னும் நகரின் கண்

திருக்கோயில்கொண்டெழுந்தருளிய

# ஸ்ரீ திரௌபதியம்மை விருத்தம்.



12 JUN 1932

இது

பலர் வேண்டுகோளினாலும்

பத்தி விருப்பத்தினாலும்

இளங்காட்டி "நற்றமிழ்ச்சங்க" த்தலைவராகிய

திருவாளர்,

மு. கோவிந்தசாமிச்சேதுராயர் அவர்களால்,

இயற்றப்பட்டு,

ஷையார் குமாரன் கோ. முருகையச் சேதுராயரால்,

பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீநிவாஸ பிரஸ்,

திருவையாறு.

ஆங்கீரசவாண்டு.

1932. [விலை அணா 1.

O25:41.7
N32
149496

உ

திருச்சிற்றம்பலம்.

இளங்காடு என்னும் நகரின்கண்

திருக்கோயில்கொண்டெழுந்தருளிய,

# ஸ்ரீ திரௌபதியம்மை விருத்தம்.



இது

பலர் வேண்டுகோளினாலும்

பத்தி விருப்பத்தினாலும்

இளங்காட்டு "நற்றமிழ்ச்சங்க"த்தலைவராகிய

திருவாளர்,

**மு. கோவிந்தசாமிச்சேதுராயர் அவர்களால்,**

இயற்றப்பட்டு,

ஷையார் குமாரன் கோ. முருகையச் சேதுராயரால்,

பதிப்பிக்கப்பெற்றது.


ஸ்ரீநிவாஸ பிரஸ்,

திருவையாறு.

ஆங்கீரசவாண்டு.

இதன் விலை] **1932.** [அணா 1.

உ

திருச்சிற்றம்பலம்.

## இளங்காடு என்னும் நகரின்கண்
## திருக்கோயில் கொண்டெழுந்தருளிய

# ஸ்ரீ திரௌபதியம்மை விருத்தம்.

### விநாயகர் வணக்கம்

பூவார்க் தவிரும் பொழில்சூ ழிளவனத்திற்
றேவார்க் தொளிருந் திரௌபதியைப் — பாவாற்
றுதிக்கைக் கயிற்கானின் சோதரனும் நீண்ட
துதிக்கைக் கணேசன் றுணை.

---

திருவளர் நிறைந்தமதி வதனமுஞ் செழுமியற் றெய்வமணமார்ந்த குழலுந்
திலகமொளிர் நுதலும்விற்புருவமுந் தோடுசேர் திவ்(வி)யவள்ளைச்செவிகளும்
அருளொழுகு கண்களும் நத்து மூக்குத்திக ளணிந்தகுமிழ் மலர் நாசியும்
அமுதமுறு குமுதமலர் வாயும்நற் செம்பவள வதரமுந் தரளநகையும்
பரவுமன் பர்க்கருளு மபயவர தங்களும் ஸ்பம்பொனணி யார மார்பும்
பட்டாடையோடுமணி யொட்டியா ணங்கள்சூழ் பகரிய மின்னலிடையும்
மருவுகிண் கிணிதா மரைப்பாத மொடுவந்து வல்லியே யெமை யாளுவாய்
*வாலவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீதேவியே. 1.

சீரோங்கு பாஞ்சால மன்னனுந் துருபதன் றிகழ்துரோண மாமுனிக்குத்
தேயத்தி னிற்பாதி தருகுவே னென்றமுன் செப்பியது தப்பி யதனால்
பாரோங்கு முனிவனும் வெகுளிமேற் கொண்டுவப் பாஞ்சால வரசன்றனைப்
பார்த்தனுஞ் சீடனாற் கட்டிவந் தேமான பங்கமடை யச்செய்தலுந்
தாரோங்கு மன்னனுஞ் சுபதங்கள் கூறிமிகு சஞ்சலங்கொள் நெஞ்சனாய்த்
தருவனத் துட்சென்றி யாசனுபயாசனாற் றக்கமகவேள்வி செய்ய
வாரோங்கு தீயில்துட் டத்துய்ம னொடுவந்த வல்லியே யெமையாளுவாய்
வாலவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே. 2.

---

* வாலவனமென்பது இளங்காடு.

துங்கமிகு வேதவே தாங்கமெய்ப் பொருளும் நீ சுடர்களுக் கதிகாரிநீ
சோதிநீ யாதிநீ நாதாந்த வெளியும்நீ துவாதசாந் தப்பொருளும்நீ
தங்குபுக ழட்டமா சித்திக்கு முதல்வி நீ சகலாகமப் பொருளும்நீ
சச்சிதா னந்தப் பிழம்பான ரூபிநீ சகலகுண கல்யாணிநீ
பொங்குசுரு திக்கெலா மெட்டாத பொருளும் நீ புண்ணியபவத் தலைவிநீ
போக்குவா வில்லாத தெய்வம் நீ யன்பர்குறை போக்கியாள் புனிதவதிநீ
மங்கலவி னைக்குமுன் னிற்கின்ற தேவு நீ வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் காசியே வளர் திரௌபதீதேவியே. 3.

அந்தகன் மதலைதுரி யோதனன் சொற்படிக் கைவர்மா ளச்சமைத்த
வரக்குமா ளிகையிலவ ரிறவாத வுண்மையை யறிவித்த முனிசூழ்ச்சியால்
தந்தையும் நின்லதுவை செய்திடக் கருதியே சகமுழுதுமோலைபோக்கித்
தரணிமன் னரையெலாம் வருவித்த போழ்தினிற் றனுவளைத் தம்பினாலே
யெந்திரத் திகிரியிற் சுழலிலக் கெய்தவ ரென்றங்கை மணவாளனு
மென்றுநின் றமையனுமாசெய்யவேசிலைவளைத் திலக்குவீழ்த்தியவிசயனை
வந்தனஞ்செய்து பொன்மணமாலைசூட்டிட்ட வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் காசியே வளர் திரௌபதீ தேவியே. 4.

ஆதியில்நீ யிந்திர சேனையாய்ப் புவிதன்னி லவதரித்திட்டநாளில்
அரனைக்கு றித்துப்பெ ருந்தவஞ்செய்துவா மாவலொடு கேட்டவளவில்
நாதனும் பாமனு மகிழ்ந்துபே ரன்பொடு நவின்ற நின்வாக்கின்படி
நாயகரை யெய்துவா யென்னலும் ஐவரை நன்மணஞ் செய்துற்றுநீ
போதமொளிர் நாரதர் வகுத்தமுறை கணவராம்புனிதரொடு வீற்றிருந்த
பூவையே சுந்தரத் தோகையே விண்ணவர் புகழ்சித் திரப்பாவையே
மாதவருமெச்சுமடமங்கையே நங்கையே வல்லியே யெமையாளுவாய்
வாலைவனமேவுமுயர்கற்பினுக்காசியே வளர் திரௌபதீ தேவியே. 5.

உலகுபுக ழோங்கார சொருபிநீ யருபிநீ யொளிரும்பராசத்திநீ
யுயர்பஞ்ச பூதம்நீ முத்தொழிற்றலைவிநீ யொப்பற்ற தெய்வம் நீயே
யலகில்பல தத்துவப் பொருளும்நீ யருளும்நீ யரிய மெய்ஞ் ஞான நிலைநீ
யகிலபுவனத்தினும் பரிபூரணசத்திநீ யண்டபிண்டத் திறைவிநீ
யிலகுபா மானந்த முத்திக்கு வித்தும்நீ யெழில்சத்த மாதர்களும்நீ
யெண்ணிலா வுயிரெலாமீன்றபே ரன்னைநீ யெளியவர்க் கனுகூலிநீ
வலியநின் னருளினற் காப்பதரி தாகுமோ வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் காசியே வளர் திரௌபதீ தேவியே. 6.

சத்தியந் தவிராத மணவாள ரான வுயர் தருமர்முத லைவரோடுநீ
சகலரும் போற்றவே யிந்திரப் பிரத்தநகர் தன்னின்மகிழ்வோ டமர்ந்து
வெத்திசையி னுற்றமன் னர்க்கெலா மறிவித் திராசசூய வேள்விதன்னை
யினிதாயியற்றுநா ளியாகபத்தினியா யிசைந்தமர்ந் தருளன்னமே
அத்தின புரியினர சாகியசு யோதனன் அந்தகன் போன்றோர் நாளில்
ஐவர்மா ளிகைநிலைமை யறியா துழன்றதா லன்றுநகை செய்திகழ்ந்த
மத்திரையின் மருகியே பத்தருக் கனுகூல வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே 7.

மண்ணகம் புகழ்கின்ற வைவரைக் கபடமாய் வரவழைத்துச் சகுனியால்
வலியசூ தாடியவர் நாடுநகர் சேனை பரிவாரங்களியாவும் வென்று
வெண்ணிலா வாணவ ங்கொண்டதுரி யோதனன் ஏவலானின்றுடையை
யெளிதாய் நினைத்துக் களைந்த துச்சாதனன் இயலாதிளைத்துவீழ
விண்ணகமதிக்குநீ துகிலும்வளரச்செய்து வீம்படக்கிச் சகுனியின்
வெற்றியைச் சூதாற்றொலைத்தைவ ரடிமையைவிலக்கிநாண்காத்தவனையே
வண்ணமட மங்கையாய் விராடநகர் தனிலுற்ற வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே 8.

பல்லாயி ரங்கோடி மந்திரப் பொருளும்நீ பரமார்த்த காருணியும்நீ
பராபரப் பொருளும்நீ செய்தவத்தி றைவிநீ பலகலையி னுட்பொருளும்நீ
சொல்லாரு மிச்சைகிரி யாஞான சத்திநீ துலங்குசமை யப்பொருளும்நீ
தொல்லையாம் பிறவிப் பிணிக்கரு மருந்தும்நீ துட்டர்சங் காரிநீயே
சல்லியமொ டேவல் பயித்தியம் பேய்களைத் தாக்கிவெல்லுந் தெய்வம்நீ
சதுர்விதப் புருடார்த்த மானநற் பொருளும்நீ தருமதே வதையும் நீயே
வல்லமையை நாவினாற் சொல்லவெளிதாகுமோ வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே. 9.

அஞ்சாமை யுற்றதுரி யோதனன் முதலியோ ரன்றுநின் மகிமையுணரா
தவையோர் நடுங்கிடச் செய்தவெங் கொடுமையா லகநொந்துசகியாமனீ
வெஞ்சினங் கொண்டுபல சபதமுனா செய்தே விரித்தகுழலோடு மறிவோர்
விளம்புமொழி தன்னைக் கடைப்பிடித் தேயவர் விதித்தபணி கடவாமலே
பஞ்சபாண் டவருடன் வனவாச மேகிநீ பகலோ னிடத்தட்சயா
பாத்திரம் பெற்றுமறை யோர்பலர்க் கமுதீந்து பசியைத் தணித்தவனையே
வஞ்சகத் தீயர்குல மாளப் பிறந்தவெழில் வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே.10.

கானக மகன்றுபோ யைவரும் நீயுங் கரந்துறை விராட நகரிற்
கசடனுங் கீசகன் செய்ததீச் செயலினைக் கருதிமாள் வித்தகுயிலே
மானம தழிந்துதுரி யோதனன் முதலான வஞ்சர்வெம் போர்க்களத்தின்
மாண்டபின் முன்சொன்னசபதநிறைவேற்றியேவார்குழன்முடித்தமயிலே
மோனமாய்ப் பேசா திருப்பதழகோ நல்ல முறைமையோ விதுதருமமோ
முறையிடுவே துன்செவிக் கேறவிலை யோவேழை முன்வா விரக்கமிலையோ
வானமுந் துதிசெயுந் தெய்வமாய் நின்றிலகும் வல்லியே யெமையாளுவாய்
வாலைவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே 11.

அம்மையே நினதுசெய லல்லாமலாகுவது மழிகுவது மொன்றுமிலைநீ
யஞ்சலென் றருளாது கைவிடி லெமக்குமற் ருதரவு வேறுமுளதோ
பொய்ம்மையே மாயினும் பரிவுகூர்ந்தென்றும் புரப்பதுன்கடனல்லவோ
புகலிடம்பிறிதில்லையம்மணி நின்னடிப் போதிலுறை வாழ்வருளுவாய்
செம்மைசே ரன்பர்த முளக்கோயில் குடிகொண்ட தெய்வச்சிரோரத்னமே
திக்கற்ற வேழையர்க் காவியே பாண்டவர்கள் தேவியே யுபகாரியே[வாய்
மைம்முகிலின் வண்ணன்முத லோர்புகழு மாணிக்கவல்லியே யெமையாளு
வாலைவன மேவுமுயர் கற்பினுக் கரசியே வளர் திரௌபதீ தேவியே. 12.

முற்றிற்று.